# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்


எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*****

முறையீட்டு மனு எண். 056/2016

ஆணை எண். 111/2017

நாள் : 12/05/2017

திரு. K. குருசாமி, – முறையீட்டு மனுதாரர்
43/2, கட்டபொம்மன் நகர்,
மேட்டுப்பட்டி, சேத்தூர் –626 121.
விருதுநகர் மாவட்டம்.

செயல் அலுவலர், – எதிர் மனுதாரர்
சேத்தூர் பேரூராட்சி, சேத்தூர்,
விருதுநகர் மாவட்டம்.

விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சியில் வசித்து வரும் திரு. K. குருசாமி என்கிற எட்டுக்குருசாமி அவர்களின் 27.01.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறை மன்ற நடுவத்தில் 29.01.2016 அன்று பெறப்பட்டு 056/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு உரிய விசாரணைகள், வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:–

## ஆணை

விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சியில் உள்ள திரு. K. குருசாமி என்கிற எட்டுக்குருசாமி என்பவது 27.01.2016 நாளிட்ட முறையீட்டு மனுவில் மனுதாரர் கீழ்க்கண்டவாறான புகார்களை தெரிவித்துள்ளார்:–

விருதுநகர் மாவட்டம் சேத்தூர் தேர்வுநிலை பேரூராட்சியில் 1. மாரியம்மன் நகர் (மேட்டுப்பட்டி மாரியம்மன் கோவில் அருகில்) 2. அம்மன் நகர் 3. அருணா ரைஸ்மில் வளாகம் சேத்தூர் மொத்தம் 11 1/2 ஏக்கர் நிலங்களும் 4. செவல் காட்டுப்பகுதியில் (மேட்டுப்பட்டி கட்டபொம்மன் நகர் இதர பகுதிகள்) சுமார் 20 ஏக்கர் ஆகிய இடங்களில் எவ்வித அனுமதியும் பெறாமல் வீட்டுமனை பிரிவுகளாக போட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்றும் மன்றத்தீர்மான அடிப்படையில் வீட்டுமனை பின்னர் அனுமதிக்கப்பட்டு வீட்டுவரி விதிக்கப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் புகார் தெரிவித்துள்ளார். பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் 16.06.2014 நாளிட்ட கடிதத்தில் வழங்கியுள்ள அறிவுரைகளை செயல் அலுவலர் பின்பற்றவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி பிளான் போட்ட இடங்களில் பேரூராட்சிக்கு பொதுப்பயன்பாட்டிற்கு வரவேண்டிய 10 சதவீத நிலம் பெறப்படவில்லை என்றும், இதனால் சுமார் 110 சென்ட் நிலம் பெறப்படாமல் விடுபட்டுள்ளது என்றும் புகார் தெரிவித்துள்ளார். இதைப்பற்றி கவனத்தில் கொள்ளாமல் பல இலட்ச ரூபாய் கையூட்டாகப் பெற்றுக் கொண்டதால் கட்டிட வரைபட அனுமதியினை செயல் அலுவலர் வழங்கியுள்ளார் எனவும் மனுதாரர் குற்றம் சாட்டியுள்ளார். மேற்கூறப்பட்ட இடங்களின் பொதுப்பயன்பாட்டிற்கு வரவேண்டிய 10 சதவீத நிலத்தின் மதிப்பு மொத்தம் 2 கோடியே 30 இலட்சம் எனவும், அவ்வகையில் இவ்இழப்பீடு தொகை குறித்து விசாரித்து பேரூராட்சி தலைவர் மற்றும் செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுத்து இழப்பீடு தொகையை வசூல் செய்யவேண்டுமென மனுதாரர் தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளார்.

2. இப்புகார் குறித்து செயல் அலுவலரின் விளக்க அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தின் 12.02.2016 நாளிட்ட அறிவிப்பாணையின் மூலம் கோரப்பட்டது. செயல் அலுவலரது 11.03.2016 நாளிட்ட விளக்க அறிக்கையில் (ந.க.எண்.43/2015) முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள இடங்களில் மனைப்பிரிவுகள் பற்றிய விவரங்கள், 10 சதவீதம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டிருப்பதற்கான அத்தாட்சிகள், அனுமதியில்லாமல் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை மற்றும் வளர்ச்சிக் கட்டணம் வசூலிக்கப்பட்ட விவரம் ஆகியவற்றை தெரிவிக்காததால் 22.04.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 23.03.2016 நாளிட்ட அறிவிப்பாணையின் மூலம் ஆணையிடப்பட்டது. 2016 சட்டமன்ற தேர்தலில் 202 இராஜபாளையம் சட்டமன்ற தொகுதிக்கு மண்டல அலுவலராக நியமிக்கப்பட்டதாலும், தேர்தல் தொடர்பான கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டியதிருப்பதாலும் 22.04.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகவில்லையென்ற விபரத்தை செயல் அலுவலர் அவர்களது ந.க.எண்.43/2015 எண்ணிட்ட 20.04.2016 தேதியிட்ட கடிதத்தின் மூலம் தெரிவித்தார். மீள 22.06.2016 அன்று விசாரணைக்கு ஆஜராக 27.04.2016 தேதியிட்ட அழைப்பாணை செயல் அலுவலருக்கு அனுப்பப்பட்டது. அவ்விசாரணையின் போது செயல் அலுவலர் பின்வரும் வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார்.

“நான் சேத்தூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக 04.09.2015 முதல் இருக்கிறேன். திரு.குருசாமி என்கிற எட்டுக் குருசாமி என்பவரின் 27.01.2016 நாளிட்ட முறையீட்டு மனு மற்றும் அதில் உள்ள விவரங்கள் தெரிந்துகொண்டேன்.

எனது கடித எண்.43/2015 நாள்.17.06.2016ல் முதல் பக்கத்தில் வரிசை எண்.1 முதல் 5 வரை உள்ள இடங்கள் (அதாவது சேத்தூர் வார்டு எண்.2ல் பன்னை கிணற்று தெரு பகுதியில் ஐந்து கட்டிடங்களுக்கு சர்வே எண்.387, 395/1, 395/5A1 A, 387/2, 386 ஆகியவை ) என்னால் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டது இனம் 6 மற்றும் 7ல் உள்ளவை (அதாவது சேத்தூர் வார்டு எண்.2ல் ஸ்ரீ மாரியம்மன் நகர் மற்றும் பன்னை கிணற்று தெரு – பகுதியில் இரண்டு கட்டிடங்களுக்கு சர்வே எண்.386, 387/2ஆகியவை ) திரு.ஞானசேகரன் முன்னாள் செயல் அலுவலரால் (தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டவர்) அனுமதி வழங்கப்பட்டது. நகர ஊரமைப்பு துறை அனுமதி பெறப்படாமலே மேலே கண்ட இனங்கள் அனுமதி வழங்கப்பட்டது கண்டறிந்து அவைகள் ரத்து செய்யப்பட்டது. தவறான அனுமதியால் கட்டப்பட்ட கட்டிடங்கள் அப்படியே உள்ளது.

முறையீட்டில் உள்ள அருணா ரைஸ் மில் வளாகத்தில் வரிசை எண் 1 முதல் 5 வரை உள்ள இனங்கள் ஏற்கனவே கட்டப்பட்டு இடிக்கப்பட்டு தற்போது புதிதாக கட்டிடம் கட்ட அனுமதி கேட்டு வந்ததால் இவைகளுக்கு கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டது. இதில் பொதுஇடம் சம்பந்தப்பட்ட எதும் பார்க்கப்படாமல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த 5 இனங்களுக்கும் எனக்கு முன்னாள் பணிசெய்த திரு.ஞானசேகரன் என்பவரே காரணம். மனுவில் குறிப்பிட்டுள்ள அம்மன் நகரில் எந்தவித அங்கீகாரமும் வழங்கப்படவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். கட்டபொம்மன் நகரில் வீட்டுமனைகள் எதும் பிரிக்கப்படவில்லை. மனுவில் குறிப்பிட்டுள்ள பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் கடிதத்தில் நகர ஊரமைப்பு துறை அனுமதி பெறப்படாமல் பேரூராட்சிகளின் கட்டிட அனுமதி வழங்கக்கூடாது என்று அறிவுரை வழங்கியுள்ளார்கள். 10 சதவீதம் சட்ட பூர்வமாக பொது உபயோகத்திற்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும். அதனுடைய வழிகாட்டு பதிவேடு மூலம் எவ்வளவு இருப்பு? என்பதை அறிந்து அறிக்கை சமர்ப்பிக்கிறேன்.” எனக்குறிப்பிட்டார்.

மேலும் பணியில் இருந்து நீக்கப் பெற்ற செயல் அலுவலர் திரு.சண்முகவேல் என்பவர் இதுபோன்று தொடர்ந்து பணம் கேட்டு மிரட்டியும் தனது மகனுக்கு வேலை வேண்டியும் அதற்காக பொய்யான புகார் மனு அனுப்பி நிர்வாகம் நல்ல முறையில் செயல்பட விடாமல் இடைஞ்சல் செய்து வருகிறார்.” என்றும் குறிப்பிட்டார்.

3. இம்முறைமன்ற நடுவத்தின் 22.06.2016 நாளிட்ட அறிவிப்பாணையின் மூலம் 05.08.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது. இவ்விசாரணையின்போது மனுதாரர் கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

"நான் சேத்தூர் மேட்டுப்பாளையத்தில் குடியிருக்கிறேன். 27.01.2016 நாளிட்ட முறையீட்டு மனு என்னால் அனுப்பப்பட்டது. சேத்தூர் மாரியம்மன் நகர், அம்மன் நகர், அருணா மைஸ்மில் வளாகம் ஆகிய இடங்களில் 11 1/2 ஏக்கர் நிலங்கள் மண்டல நகரமைப்பு அலுவலகம் மூலம் எந்த வித அனுமதி பெறாமலே மனைகளாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. பேரூராட்சியில் மன்ற தீர்மானம் மூலம் அங்கீகாரம் செய்துள்ளார்கள். மேலும் மேட்டுப்பட்டி கட்டபொம்மன் நகரில் சுமார் 20 ஏக்கர் நிலம் மண்டல நகரமைப்பு அலுவலருடைய அங்கீகாரம் இல்லாமல் பேரூராட்சியின் தீர்மானம் அடிப்படையில் வீட்டு மனையின் வரைப்படம் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் மனைப்பிரிவு மொத்த மனை அளவில் 10 சதவீதம் பொது உபயோகத்திற்கு ஒதுக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒதுக்கப்படாமல் அந்த இடங்களையும் சேர்த்து மனைப்பிரிவு பேரூராட்சியால் அங்கீகரிக்கப் பட்டுள்ளதால் பேரூராட்சிக்கு 2 கோடியே 60 இலட்சம் (அருணா மைஸ்மில் வளாகம், அம்மன் நகர், மாரியம்மன் நகர் ஆகிய 3 இடங்களில் 10 சதவீத ஒதுக்கீடு செய்யாததால் ஏற்படக்கூடிய இழப்பு) இழப்பு ஏற்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது என்னால் முறையீட்டு மனு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பப்பட்டு விசாரணைக்கு பேரூராட்சியை சேர்ந்தவர்கள் வந்தபின்பு சம்பந்தப்பட்ட இடங்களில் அங்கீகரிக்கப்பட்ட மனைகளில் தகவல் பலகை வைக்கப்பட்டுள்ளது. அதை நிர்வாக அலுவலர் புகைப்படம் எடுத்தார். இதுகுறித்து 2013 முதல் பல அதிகாரிகளுக்கு தொடர்ந்து மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.

4. மேற்கண்ட மனுதாரரின் வாக்குமூலத்துடன் வார்டு எண். 2ல் சர்வே எண். 386 ல் திரு. வி. மாரிமுத்து என்பவருக்கு கட்டிட அனுமதி வழங்குவது குறித்து பேரூராட்சி மன்ற கூட்டத்தில் பொருள் சேர்க்கப்பட்டதன் நகலினையும் அம்மன் நகரில் மனைகள் பிரிப்பதற்காக வரைபடத்தில் தலைவர் அங்கீகாரம் செய்து கையொப்பமிட்டுள்ள வரைபட நகலினையும் சமர்ப்பித்துள்ளார். மேலும் பேரூராட்சி தலைவருடைய கணவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாக குறிப்பிட்டு அத்தாட்சியாக ஒப்பந்த பத்திர நகல் ஒன்றினை சமர்ப்பித்துள்ளார்.

5. மனுதாரர் அளித்த ஆவணங்களில் ஒன்றான 29.08.2013 நாளிட்ட பேரூராட்சி மன்ற கூட்ட பொருள் எண்.8ல் குறிப்பிட்டுள்ள திரு. வி.மாரிமுத்து என்பவருக்கு கட்டிட வரைபட அனுமதி அளிக்கப்பட்டது குறித்து செயல் அலுவலரால் தாக்கல் செய்யப்பட்ட 17.06.2016 நாளிட்ட அறிக்கையினை பரிசீலிக்கப்பட்டது. அவ்வறிக்கையில் மேற்படி நபருக்கு முறைகேடாக கட்டிட அனுமதி வழங்கப்பட்டது குறித்து வரிசை எண். 6ல் குறிப்பிடப்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் பொதுப்பயன்பாட்டிற்கான நில ஒதுக்கீடு பெறப்படாத இனங்களினால் ஏற்பட்ட நிதிஇழப்பு விவரங்களை 2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 6(4)ன் கீழ் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் இவ்வலுவலக கடிதம் அ.மு.எண்.056/2016 என்னளிட்ட 28.07.2016 நாளிட்ட கடிதம் மூலம் ஸ்தல ஆய்வு செய்து அறிக்கை செய்ய ஆணையிடப்பட்டார்.

6. 12.08.2016 நாளிட்ட தல ஆய்வு அறிக்கையில் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேத்தூர் பேரூராட்சியில் வீட்டு மனைகள் அனுமதி வழங்குவதில் 10 சதவீத நிலம் பேரூராட்சிக்கு நில ஒதுக்கீடு பெறப்படாத இனங்களில் ஏற்பட்ட நிதிஇழப்பினை வழிகாட்டு பதிவேடு மூலம் அறிந்து கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

<u>10 சதவீத இடத்திற்கு மதிப்பு தொகை விவரம்</u>

| வரிசை எண் | இடத்தின் பெயர் | மொத்த பரப்பளவு | 10 சதவீதம் இடம் ச.மீ | 10 சதவீத இடத்தின் மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 1 | **ஸ்ரீ அம்மன் நகர்** | 1 ஏக்கர் / **3924 ச.மீ** | 392.4 | ரூ.25,34,904 |
| 2 | மேட்டுப்பட்டி மாரியம்மன் நகர் | 8.80 ஏக்கர்/ 34531 ச.மீ | 3453.1 | ரூ.74,41,430 |
| 3 | அருணா மைஸ்மில் வளாகம் | 1.32 ஏக்கர் / 5213 ச.மீ | 521.3 | **ரூ.33,67,598** |
| | | | மொத்தம் | ரூ.1,33,43,932 |

௭. மேற்கூறிய சூழ்நிலையில் முறையீட்டு மனுதாரரின் புகார் மனு குறித்து முழுமையாக ஆய்வு செய்து சமர்ப்பிக்கப்பட்ட பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு அறிக்கை, செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, தொடர்புடைய ஆவணங்கள், வாக்குமூலம் ஆகியவைகள் முழுமையாக பரிசீலிக்கப்பட்டன.

௮. அரசாணைகளின் படி வீட்டுமனைப் பிரிவுகள் (Lay out) அங்கீகரிக்கப்படும் நேர்வில் 10 சதவீத நிலம் பொதுப்பயன்பாட்டிற்கான நிலமாக பெறப்படவேண்டும். ஆனால், இவ்வினத்தை பொறுத்தவரை நகர் ஊரமைப்புத் துறை அங்கீகாரம் இன்றியும் 10 சதவீத பொதுப்பயன்பாட்டிற்கான நிலம் பெறப்படாமலும் பேரூராட்சியால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், 22.06.2016 அன்று நடைபெற்ற விசாரணையின் போது செயல் அலுவலர் சமர்ப்பித்த வாக்குமூலத்தில் அருணா ரைஸ்மில் பகுதியில் பொதுப்பயன்பாட்டிற்கு 10 சதவீத நிலம் பெறப்படாமல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்துள்ளார். அவ்வாறே மேட்டுப்பட்டி மாரியம்மன் நகர் பகுதி அனுமதி சம்பந்தமாக அளித்துள்ள விவரங்களிலிருந்து அனுமதியில்லாமல் வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்பதும் உறுதியாகிறது.

௯. அம்மன் நகர் தொடர்பாக பிறிதொரு முறையீட்டு மனுதாரர் திரு. சண்முகவேல் என்பவரது முறையீடு (முதல் மனு எண்.0059/2016/பே) தொடர்பான விசாரணையின் போது செயல் அலுவலரால் 28.06.2016 அன்று அளிக்கப்பட்ட வாக்குமூலத்தில் அம்மன் நகர் பகுதியில் வீட்டுமனைகள் பிரிப்பதற்கான அங்கீகாரம் எதும் பேரூராட்சி அலுவலகத்தின் சார்பில் வழங்கப்படவில்லை என்றும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு என்று பேரூராட்சியால் அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது என்றும் உறுதியளித்துள்ளார். மேலும் அம்மன் நகர் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு என்றும் தெரிவித்துள்ளார். பேரூராட்சி தலைவி வரைபட அங்கீகாரத்தில் கையொப்பமிட்டுள்ளதான புகார் குறித்து காவல் துறைக்கு கடிதம் அளித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அதன்படி காவல் துறை விசாரணையில் அக்கையெழுத்து பேரூராட்சி தலைவியின் கையெழுத்து இல்லை என்று கோப்பை முடித்து விட்டதாக தெரிவதாகவும் குறிப்பிட்டுள்ளார். அம்மன் நகர் பகுதியில் ஒரு வீட்டுமனை கூட விற்கப்படவில்லை என்றும் உறுதியளித்துள்ளார். இப்பொருள் தொடர்பாக மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரது 06.09.2016 நாளிட்ட அறிக்கையில் பேரூராட்சி தலைவியின் கையொப்பம் தொடர்பாக பேரூராட்சி துணைத் தலைவரால் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் காவல் துறைக்கு புகார் அளிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அம்மன் நகர் தொடர்பாக 10 சதவீதம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய 392.4 சதுர மீட்டர் இடம் மற்றும் வழிகாட்டி பதிவேட்டின்படி, இட மதிப்புத் தொகை விவரங்களை ஏற்கனவே தனது அறிக்கை ந.க.எண்.38656/2015/பே.3, நாள் 12.08.2016ல் சமர்ப்பித்துள்ளதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அறிக்கையின் வாயிலாக சேத்தூர் பேரூராட்சிக்கு 10 சதவீத பொதுப்பயன்பாட்டிற்கான நிலம் பெறப்படாத வகையில் ரூ.1,33,43,932 நிதி இழப்பீடு ஏற்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

௧௦. மேலும், புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள வீட்டு மனைப் பிரிவுகள் நகர் ஊரமைப்புத் துறையினரால் அங்கீகரிக்கப்பட்டவையா என்பது குறித்தும் பொதுப் பயன்பாட்டிற்காக 10 சதவீத நிலங்கள் பேரூராட்சியால் பெறப்பட்டுள்ளதா, இவ்வாறு பெறப்படாமையால் ஏற்பட்டுள்ள இழப்பீட்டினை ஈடுசெய்தல் குறித்தும் குறிப்பான அறிக்கை கோரப்பட்டது. அதனடிப்படையில் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரது அறிக்கை ந.க.எண் 38656/15/பே–3 நாள் 18.10.2016 வரப்பெற்றது. அதில் கீழ் குறிப்பிடப்பட்ட விபரங்கள் அளிக்கப்பட்டிருந்தது.

௧௧. சேத்தூர் பேரூராட்சியில் புல எண்.394–ல் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் ஸ்ரீ அம்மன் நகர் என்ற வீட்டுமனைப்பிரிவும் 8.80 ஏக்கர் பரப்பில் மேட்டுப்பட்டி மாரியம்மன் நகர் என்ற மனைப்பிரிவும் 1.33 ஏக்கர் பரப்பில் அருணா அரிசி ஆலை வளாகத்தில் வீட்டுமனைப்பிரிவும் ஏற்படுத்தப்பட்டன என்றும், மேற்படி வீட்டுமனைப்பிரிவுகளுக்கு நகர் ஊரமைப்புத் துறையின் அங்கீகாரம் பெறப்படவில்லை என தெரிவித்துள்ளார். நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதிப் பெற்று மேற்படி மனைப்பிரிவுகள் அமைக்கப்பட்டிருந்தால் மனைப்பிரிவுகளின் மொத்தப்பரப்பில் 10 சதவீதம் சாலை மற்றும் பொதுப்பயன்பாட்டிற்கென பேரூராட்சியால் தானமாகப் பெற்றிருக்க இயலும். ஆனால், இந்நேர்வு சம்பந்தப்பட்ட வீட்டுமனைப்பிரிவுகள் அங்கீகரிக்கப்படாததால் 4366.80 சதுரமீட்டர் நிலத்தினை தானமாக பேரூராட்சிக்கு பெற இயலவில்லை எனவும் கணக்கிடப்பட்ட மேற்படி பொதுப்பயன்பாட்டிற்கான நிலத்தின் மதிப்பு ரூ.1.33 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

12. மேலும், அம்மன் நகர் வீட்டுமனைப்பிரிவிற்கு விதிமுறைகளுக்கு முரணாக முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவரால் மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக பேரூராட்சியின் துணைத் தலைவரிடமிருந்து புகார் வரப்பெற்ற நிலையில் காவல் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யப்படவில்லை என பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

13. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வீட்டுமனைப்பிரிவுகளைத் தவிர்த்து சேத்தூர் பேரூராட்சியில் செயல் காட்டுப்பகுதியில் மேட்டுப்பட்டி கட்டபொம்மன் நகர் என்ற வீட்டுமனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். இம்மனைப்பிரிவின் மொத்தப் பரப்பளவு 13.325 ஏக்கர் இம்மனைப்பிரிவில் 1986–ஆம் ஆண்டு முதல் படிப்படியாக 348 வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்றும், அவ்வீடுகளுக்கு சொத்துவரி நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். அங்கீகரிக்கப்படாத மேற்படி வீட்டுமனைப்பிரிவில் பொதுப்பயன்பாட்டிற்குரிய 10 சதவீத இடம் (1.33 ஏக்கர்) பேரூராட்சிக்கு தானமாக பெறப்படவில்லை. எனினும், இம்மனைப்பிரிவுகளுக்கு பேரூராட்சியின் நிதியிலிருந்து சாலை மற்றும் பிற அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன எனத்தெரிவித்துள்ளார். இவ்வகையில் பேரூராட்சிக்கு ஏற்பட்ட நிதிச் சுமை ஏதும் தெரிவிக்கவில்லை.

14. எனவே விசாரணைகள், வாக்குமூலங்கள் மற்றும் அறிக்கைகள், ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலித்ததின் அடிப்படையில், புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள மனைப் பிரிவுகள் தொடர்பாக கீழ்க்கண்டுள்ள சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், நடைபெற்றுள்ளது உறுதியாகிறது :-

1. வீட்டு மனைப் பிரிவுகளுக்கு முறைப்படி நகர் மற்றும் ஊரமைப்புத்துறை அனுமதி பெறப்படாதது;
2. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் முறைகேடாக கட்டிட அனுமதிகள் வழங்கியது;
3. அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளுக்கு முறைகேடாக அனுமதி வழங்கியதனால் 10 சதவீத பொதுப் பயன்பாட்டிற்கான இடத்தினை பெறப்படாத நிலை ஏற்படுத்தியது;
4. சேத்தூர் பேரூராட்சிக்கு 10 சதவீதம் பொதுப்பயன்பாட்டிற்கான நிலம் பெறப்படாத வகையில் ரூ.1,33,43,902/– நிதி இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

15. அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைப்பிரிவுகளில் கட்டிட அனுமதி வழங்கிய செயல் அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படவேண்டும். அங்கீகரிக்கப்படாத வீட்டுமனைப்பிரிவில் வீடுகள் கட்ட கட்டிட அனுமதி வழங்கி சொத்து வரி வசூலிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் அப்பகுதி மக்களுக்கு சாலைபோன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுத்ததால் பேரூராட்சிக்கு நிதிச் செலவினம் ஏற்பட்டுள்ளதையும் கருத்தில் கொள்ளவேண்டும். மேற்குறிப்பிட்ட முறைகேடான நடவடிக்கைகளுக்கும் இழப்பீடுகளுக்கும் பொறுப்பு நிர்ணயித்து, சம்பந்தப்பட்ட செயல் அலுவலர்கள் மீது துறை வாரியான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதுடன் பேரூராட்சிக்கு ஏற்பட்டுள்ள இழப்பீட்டினை சரிகட்டவும் அரசாணை (நிலை) எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 04.05.2017 ல் ஆணையிடப்பட்டுள்ளபடி, மேற்படி அங்கீகாரமில்லாத வீட்டுமனை பிரிவுகளில் தனிநபர் வாங்கிய மனைகளை முறைப்படுத்த துறைவாரியான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்து ஆணையிடப்படுகிறது.

16. மேலும் பேரூராட்சி தலைவர் கையொப்பம் இட்டுவிட்டு பின்பு தன் கையொப்பம் இல்லை என்று கூறுவது நம்பும்படியாக இல்லை. இதுகுறித்து அசல் மனு வழக்கு எண்.59/2016—ல் தனியே ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாளன்று கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்:

1. திரு. K. [illegible]
   மேட்டுப்பட்டி, சேத்தூர் - 626 121.
   விருதுநகர் மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
   சேத்தூர் பேரூராட்சி,
   சேத்தூர், விருது நகர் மாவட்டம்.
3. E. முருகன், செயல் அலுவலர்,
   சேத்தூர் பேரூராட்சி, சேத்தூர்,
   விருதுநகர் மாவட்டம்.
4. ஞானசேகரன், செயல் அலுவலர்,
   தற்காலிக பணிநீக்கத்தில் உள்ளார்.
   சேத்தூர் பேரூராட்சி, சேத்தூர்,
   விருதுநகர் மாவட்டம்.
5. மாவட்ட ஆட்சித் தலைவர்
   விருதுநகர் மாவட்டம், விருது நகர்.
6. பேரூராட்சிகளின் இயக்குநர்,
   குறளகம், சென்னை – 600 108.
7. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   பேரூராட்சிகளின் உதவி இயக்குநரகம்,
   மதுரை மண்டலம், மதுரை – 20.